# விடியல்

## The Dawn

இதழ்-74, ஜூன்-2015
தனிச்சுற்றுக்கு மட்டும்

கௌரவ ஆசிரியர்
முனைவர். வே. இராதாகிருஷ்ணன்
கல்லூரி முதல்வர்

ஒருங்கிணைப்பு
முனைவர்.பெ.கணேசமுருகன்
துறைத்தலைவர்

ஆசிரியர் குழு
தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

தட்டச்சு & இதழ் வடிவமைப்பு
முனைவர் சி.ஆர்.சுரேஷ் திரு. செ. தங்கராஜ்
முனைவர் த.சுந்தரராஜ் திரு. மு. சதீஸ்குமார்

வெளியீடு:
**தமிழ்த்துறை**

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்செங்கோடு–637215.
தமிழ்நாடு, இந்தியா.
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in
**E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.*

## தலையங்கம்

உலகில் தற்போது சுமார் 7 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அகதிகளாக அல்லல்படுவதாக தரவுகள் தெரிவிக்கின்றன. ஜூன் மாதம் 20 ம் நாள் ‘ஆபிரிக்க அகதிகள் தினம்’ கொண்டாடப்படுவதால், அந்த நாளை உலகில் உள்ள பல நாடுகள் ‘உலக அகதிகள் தினமாகப் பிரகடனப்படுத்தியிருந்தன. சுமார் 7.6 மில்லியன் மக்கள் இன்னமும் இந்த உலகில் அகதிகளாக உள்ளனர் என்பது இந்த உலகை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் செய்திகளில் ஒன்று.1994 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக ஐ.நா. குறிப்பிடுகின்றது. யுத்தம், வன்முறை, பஞ்சம் போன்ற பல்வேறு காரணங்களால் அகதிகள் உருவாகின்றனர். சிரியா, இலங்கை, ஆப்கானிஸ்தான், சூடான், சோமாலியா போன்ற நாடுகளிலிருந்தே அதிகளவான அகதிகள் உருவாகியுள்ளதாக ஐ.நா கூறுகிறது. உலக அகதிகளில் 55 சதவீததிற்கும் அதிகமானவர்கள் சிரிய அகதிகள் எனவும் ஐ.நா தன் கணக்கெடுப்பில் பதிவு செய்துள்ளது. இலங்கையைச் சேர்ந்த சுமார் 10 லட்சம் பேர் உலக நாடுகளில் அகதிகளாக தஞ்சம் பெற்றுள்ளனர். பல்வேறுபட்ட மோதல்கள் காரணமாக அகதிகளாகி தமது நாட்டினுள்ளும், வேறு பிற நாடுகளிலும் இடம்பெயர்ந்து, பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் அகதிகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் முக்கியமான நோக்கமாகும்.

# உள்ளடக்கம்

**கவிதை**........................5-16

- சுற்றுச்சூழல் தின கவிதைகள்
- குழந்தைத்தொழிலாளர் ஒழிப்பு தின கவிதைகள்
- இளைஞர் தின கவிதை
- தந்தையர் தின கவிதைகள்

**கட்டுரை**..........................17

- உலகச் சுற்றுச்சூழல் தின கட்டுரைகள்
- குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு தின கட்டுரைகள்
- இரத்தான தின கட்டுரை

**பொது அறிவு**.........18-28

- இந்த மாதத்தின் முக்கிய தினங்கள்

# கவிதைகள்

## உலக சுற்றுச்சூழல் தின கவிதைகள்

**நிலத்திற்கு தேவையானது வளம்**
அதில் வளரும் மரத்திற்கு
தேவையானது ஈரம்
அந்த ஈரத்திற்கு தேவையானது
இயற்கை சீற்றம்
அந்த சீற்றத்திற்கு
தேவையானது மரம்
அந்த மரத்தினால் மனிதனுக்கு
நல்ல காற்று கிடைக்கும்
இயற்கையை அழிக்காமல்
இருந்தால் மழையைப் பெறலாம்
மழையால் நிலம் வளம் பெறும்!

**மு.கௌசல்யா**
உயிர்த்தொழில்நுட்பவியல்-முதல் ஆண்டு

**சல சலவென ஓடும் நதிகள்**
சிலுசிலுவென வீசும் தென்றல்
பச்சைப் போர்வை போர்த்திய
வயல்வெளிகள்
வெள்ளை ஆடை அணிந்த
மேகம்கூட்டம்
இசையின்றி நடனமாகும் மரங்கள்
இசையோடு காணப்படும் குயில்கள்
புன்னகையோடு பூத்துக் குலுங்கும்
பூக்கள்
பலநூறு வண்ணங்களில் பட்டாம்
பூச்சிகள்
மெய்மறக்க செய்யும் இரவின்
அதிசயம்...

**M.புவனேஸ்வரி**
இளங்கலை இரண்டாமாண்டு நுண்ணுயிரியல்.

**அதிகாலைப் புது மலரொன்று**
மென்மையாகப் புன்னகைத்து
என் விழிகளில்
இனிதே காட்சியானது
புன்னகையுடன் தொடங்கிய தினம்
புதுமைகளுடன் வரவேற்க
இனிதே தொடங்குகிறேன்

**செ.சங்கர்**

**சிறுதுளியாய் தோன்றி**
பெரியகடலாக காட்சியளிப்பவனே...!
கதிரவனை அருகில்
காட்சியளிக்க வைத்த
அற்புதம் படைத்தவனே...!
முத்து பவளங்களை உன்னுள்
ஒழித்து வைத்த பவளத் தீவே...!
வான் நீலத்தை பறித்துக் கொண்ட
அற்புதக் கடலே...!
உன்னுள்
மறைந்துள்ள அற்புதங்களை
பார்க்கத்துடிக்கும்
அறிவியலாளர்கள்...
உன் தொலைதூரத்தைக் கண்டு
மயங்கிய என்னை

உன் அழகிய நீரால்
எழ வைத்தாயே...!
இத்தனை சிறப்பினையும்
தன்னுள் கொண்டு
மௌனமென்னும்
அலையை
அலையவிடும்
உனக்காக ஒதுக்கிய தினமே
உலக கடல் தினம்...

**மா.குமரேசன்,**
இரண்டாமாண்டு உயிர்த்தொழில்நுட்பவியல்-ஏபிரிவு

---

**முத்துக் கடலே வாழ்க - இசை**

முழங்கும் கடலே வாழ்க
த்தும் அலைகள் கரையை – வந்து
தாவும் கடலே வாழ்க
மொத்தக் கப்பல் தோணி – மேல்
மிதக்கும் கடலே வாழ்க
ஒத்துப் பறவைகள் பாடி – மீன்
உண்ணும் கடலே வாழ்க
வண்ணம் பாடிப் பொழியும் - நல்ல
மழையும் உன்னால் அன்றோ...!
தண் என்றுவரும் காற்றை – நீ
தந்தாய் கடலே வாழ்க
கண்ணுக் கடங்க வில்லை – நான்
காணும் போதுன் பரப்பு...
மண்ணிற் பெரிதாம் கடலே – நீ
வாழ்க வாழ்க வாழ்க...!

**ந.புஷ்பவள்ளி**-முதலாமாண்டு வேதியியல்

**பகலில் கடல்ரசமிழந்த கண்ணாடி**
ஆகவே நிலா
இரவில் வருகிறது
முகம்பார்க்க
அலை காற்றெழுதும் கவிதை
கவிதையின் பொருள்
கம்பனுக்கே விளங்காது
ஆனாலும் படிக்கிறது
பலகோடி இதயம்
மழை இல்லையே
கொந்தளிக்கிறது மனசு
மழையால் கொந்தளிக்கிறது கடல்
கடல் சுழற்றிப்போடும் அலை
உடையைது
எடுத்து உடுத்தலாமா?
இது ஏழையின் கற்பனை
கடலில் இடம் வாங்கி
மிதக்கும் வீடுகள்
கட்டி வாடைக்கு விடலாமா?
இது பணக்காரனின் கற்பனை
நிர்வாணப் பள்ளமாய் இருந்த
உனக்கு
நீராடை அணிவித்து நாகரிகத்தை
வளர்த்தது யார் கடலே....?
கடலை மௌனம்
என்றுதான் நினைத்திருந்தாள்
பேரிரைச்சலைத் தரும்
அலைகள்
பெரும் மௌனம் என்பதாகத்தான்
நம்பிக்கொண்டிருந்தாள்
கடல்

பெரும் சப்தமிடுவதாக
ஒற்றைக்குரலில்
சொல்லிக்கொண்டிருந்தாள்
அவளிடம்
அலைகளால்நனைந்த மணற்பரப்பில்
நிலத்தினை
அளவிட்டுக் கொண்டிருக்கிறாள்
கடலின்
கதையினைக் கேட்டபடி
சிறுமி
அவள்
பிரபஞ்ச மொழியை அலைகளின்
ஓசையில் புரிந்துகொண்டு
வீடு திரும்பினாள்
கடலை அறியாதபடியும்
அறிந்த படியும்
நிலவுக்கு வெளிச்சமாக
நெருப்புக்கு வெப்பமாக
கவிதைக்கு வார்த்தையாக
கடலுக்கு நீலமாக
எனக்கு நீ உனக்கு நான்
உலகினில் பெரியவள் நீயே
உணவுக்கும உப்புக்கும்
நீயேதான் தாயே...!
உண்ண மீன்தந்து பசியாற்றினாய்
அலை ஊழியாய்
உயிர்களை பலியாக்கினாய்
பலவகை உயிர்களின்
தாயாகிய
பெரும்பலத்தோடு
சிலபோது பேயாகிறாய்
வான்நீல நிறம்காட்டும் கண்ணாடியே
இவ்வையமும்
சிறிது உன் முன்னாடியே
உன்னுள்ளே
வாழ்ந்திடும் உயிர்கள் பல
இவ்வுலகினில் மனிதர் போல்
குணங்கள் பல,
மண்ணோடு
விண்ணையும் இணைத்தாய் - வான்
மழைநீருக்கு புத்துயிர் கொடுத்தாய்
கரையோர நண்டுகள் கண்டு – யாம்
கவலைகள் மறந்தது உண்டு
அழியாத செல்வங்கள் உன்னில்-
மனிதகுலம் வாழ வழங்கிடு
மண்ணில்
கடலில் சிந்திய என் கண்ணீரைக்
தேடுபவன், துன்பங்களைக் கூட
தொலைக்கத்துணியாதவன்,
வாழ்க்கைப் படகை
வழிச்செலவுக்கு விற்றவன்,
கலவைக் குவியலில் கனவைத்
தொலைத்தவன்...

**பி.சந்தோஷ்**
பிகாம் சிஏ – சி பிரிவு

## குழந்தைத்தொழிலாளர் ஒழிப்புதினம் - கவிதைகள்

அழகாய் படர்ந்த உலகம்
அழுகையில் கழியும் காலம்
அறியாக் குழந்தையின் சோகம்

எல்லாம் வாழ்வில் மாயம்
தொலைவில் தெரிந்தது பள்ளி
திக்கி தினறுது வாழ்க்கை
பள்ளிப் பாதையில் வந்தது
வறுமை எனும் முள்வேலியாக
கல்வி எல்லையில்லா வானம்போல
எட்டி எட்டிப் பார்த்தும் எட்டவில்லை
அந்த வானம்
இந்த மழலை மொட்டுகளுக்கு!
இளைஞர்களுக்கு இமையமும்
சொந்தம் என்பார்கள்
அது இளைஞர்களுக்கு மட்டுமல்ல
குழந்தைச் செல்வங்களுக்கும் தான்!
நலமான கல்வியை
குழந்தைகளுக்கும் கொடுப்போம்
குழந்தைத் தொழிலை ஒழிப்போம்...

**ர. ஜெஸ்னா**
பிபிஏ – முதலாமாண்டு -பி பிரிவு

---

வருந்தி வாடிய முகம்
உருகி ஓடிய மனம்
ஈட்டிய பணம் எவர்க்கோ
வியர்வைத் துளி மண்ணுக்கு
தடுப்பகங்கள் இருந்தும்
தடுமாறும் குழந்தைகள் உண்டு
வாழ்க்கையில் வளம் என்னும்
வார்த்தையில்லை
வலி என்னும் வேதனை
உண்டு
பகலின் சூரியன் இல்லை
இரவின் நிலவு இல்லை
ஓயாது உழைத்த களைப்பு
உண்டு
கற்க கல்வியில்லை
கசக்க கவலை உண்டு
ஓடும் வயதில்
ஓயாது உழைக்க காரணம் என்ன?
தாவும் வயதில்
தஞ்சத்தில் தத்தழிக்கும்
நிலைதான் என்ன?

---

**உலகிற்கு அழுகையுடன்**
முகவரி தந்தாயே...!
உனக்கு பசிக்கும்
என்பதை அறியாது
உன் தாயால் கைவிடப்பட்டாயே...!
ஆனால் உன்னை கைவிட்டது
உனது தாய்மட்டுமே...!
நமது இந்திய
அரசு இல்லையே...!
உன் பசியால்
வேலைக்கு சென்றயே...!
உன் கஷ்டத்தை அறிந்த
எமது இந்திய அரசு
உன்னைக் கண்டெடுத்து
உன் கஷ்டத்தைப் போக்கியதே...!
அத்தினமே
குழந்தைத் தொழிலாளர்
ஒழிப்பு தினமாம்...

**மா.குமரேசன்**
இரண்டாமாண்டு உயிர்த்தொழில்நுட்பவியல் துறை - அ பிரிவு

## இளைஞர் தின கவிதை

**சின்னஞ் சிறுவன் தன்**
ஏழமையில் தவழும்
எனக்கும் உண்டு
வண்ணக் கனவுகள்...
சிதையுண்ட வீட்டின்
ஒரு மூலையில்
முடங்கிய தாயைக் கண்டு
சிதறிய கனவுகள்
பொறுப்பற்ற தந்தையின்
போக்கினால்
பாழாய்ப் போன
பகற் கனவுகள்...
அம்மாவின்
கிழிந்த சேலைக்காய்
தாவணிக் கனவுகள்...
பசியின் கொடுமையினால்
இழந்து விட்ட
தங்கையின் நினைவுகள்...
இவையெல்லாம் மாற்றத்தான்
சிறுசிறு வேலைகள் செய்கிறேன்
இருந்தும் முடியவில்லை...
வேர்களைத் தாங்க
நாங்களும் வேர்களைத் தாங்க
என்போன்ற விழுதுகளும்
கல்வியைத் தாங்க...

**ப.ஸ்ரீநிவாசன்**
முதலாமாண்டு – வேதியியல்

---

## தந்தையர் தின கவிதைகள்

**தினமும் அர்ச்சனை...**
ஆனால் முகம் பார்த்து
பேசமாட்டார்!!

ஒரு சில நேரங்களில்
உரத்த குரல் ஆனால்
ஒரு நாளும் சிறு அடிகூட
அடித்ததில்லை!!!

நீங்கள் சொன்ன
அர்ச்சனை எதிர்கால
வாழ்க்கைத் தத்துவம்
என்பதை இன்று உணர்ந்தேன்
தந்தையே!!!

---

**கோவிலில் வரிசையில் நிற்கும்போது**
தந்தையின் மீது ஏறிப் பார்த்தும்
இறைவனைக் காண
முடியவில்லை என வருந்தினேன்...
பிறகுதான் தெரிந்தது ஏறியது
தந்தையென்ற தெய்வத்தின்
மீதென்று...

---

**தந்தையே...**
வாழ்க்கை தந்த
உன் பெருமையை

எந்தக் கவிதையால்
சொல்லிவிட முடியும்...?

உழைத்துக்களைத்த
உன் கை கால்களை
மிதிக்கச் சொல்வாய்...

அறியாத வயதில்
மிதித்ததை நினைத்து
இதயம் வலிக்குதப்பா...!

இப்போதென்றால்
முத்தம் வைத்திருப்பேன்...!

உனக்கு ஆடை வாங்கும் போது
விலையைப் பார்ப்பாய்...!
எனக்கு மட்டும்
தரத்தை பார்ப்பாய்...

என்னுடைய
வெற்றிகளுக்குப் பின்னால்
நீ இருக்கிறாய்...
தோல்விகளுக்குப் பின்னால்
உன் தோள் இருக்கிறது...!

எப்படி எப்படி எல்லாமோ
தன் பாசம் உணர்த்துவாள் - அம்மா
ஒரேயொரு கை அழுத்தத்தில்
எல்லாமே உணர்த்துவார் – அப்பா...

முன்னால் சொன்னதில்லை
பிறர் சொல்லித்தான்
கேட்டிருக்கிறேன், என்னைப்
பற்றி பெருமையாக அப்பா
பேசிக்கொண்டிருந்ததை...!

அம்மா எத்தனையோ முறை
திட்டினாலும் உறைத்ததில்லை
உடனே உறைந்திருக்கிறது
என்றேனும் அப்பா
முகம் வாடும் போது

உன் அப்பா எவ்வளவு உற்சாகமாக
இருக்கிறார் தெரியுமா
என என் நண்பர்கள்
என்னிடமே சொல்லும் போதுதான்
தெரிந்தது எத்தனை
பேருக்குக் கிடைக்காத
தந்தை
எனக்கு மட்டும் என்று...!

கேட்டா உடனே
கொடுப்பதற்கு
முடியததால் தான்
அப்பாவை அனுப்பி
இருக்கிறாயோ கடவுளே....!

**ச.ஹரீஸ் குமார்**
வேதியியல் முதலாமாண்டு

**ஐந்திரண்டு மாதம் சுமந்து**
வலிகொண்டு பெற்றாள்
அன்னை...!

ஆனால் இருபது வருடமாய்,
சுமக்காமல் சுமந்தாயோ?
என்ன சொல்ல உன்னை

தோளில் சுமந்தாலும்
வார்த்தையால் வழி நடத்திய
கண் அறிந்த தெய்வம் நீ...

என்றும் நீயே என் வழிகாட்டி
என்றும் நீயே என் தெய்வம்

தந்தையே...!!
கடவுள் கொடுத்த வரம்
கிடைக்கவில்லை எனக்கு...
கடவுளே கிடைத்த வரமாக
அப்பா....

இப்படிப்பட்ட தந்தையே!
உன்னை தந்தையர் தினமாக
கொண்டாடுவதை நினைத்து
நான் மிகவும்
பெருமைப்படுகிறேன்..

என்றும் உன் காலடியில்
கிடக்கும் உன்
உறவு நாங்கள்....

**M.அருண்குமார்**
வேதியியல் முதலாமாண்டு

---

**உன்னை வயிற்றில்**
சுமக்கும் பாக்கியம்
எனக்கு இல்லை...

ஆகையால் என்
நெஞ்சில் சுமந்து
திர்த்துக் கொள்கிறேன்...!
இப்படிக்கு,
அப்பா.

**K.மணிகண்டன்**
வேதியியல் முதலாமாண்டு

---

**அம்மா, சித்தி, அக்கா,**
தங்கை, அண்ணன் என
மூன்றெழுத்து உறவுகள் பல
என்னை சூழ்ந்திருக்க
'அப்பா' எனும் மூன்றெழுத்து உறவு
'உயிர்' எனும் மூன்றெழுத்துடன்
கலந்து 'மூச்சு' எனும்
மூன்றெழுத்தாகிவிட்டது..

கா.அஜிதா
உயிர்த்தொழில் நுட்பவியல் துறை - முதலாமாண்டு

---

**அன்னை கருவுற்ற நாள் முதல்**
என்னையிம் அன்னையையும்
நெஞ்சில் சுமந்தாய்,
நான் உருவெடுத்துப்

பிறந்த நாள் முதல்
உன் தோளில் சுமந்தாய்,
இன்று நான்
உன் திருமகன் ஆன பின்பும்
என்னை
உன் கண்ணில் சுமக்கிறாய்,
உன் தீராத பாசத்திற்கு
இந்த
தந்தையர் தினத்தன்று
தலை வணங்குகிறேன் தந்தையே...

**ச.சசிக்குமார்**
I-BBA – A

---

**அப்பா....**

நான் பிறக்கும் போது
உன் ஸ்பரிசத்தோடு தொடங்கியது
என் வாழ்க்கை!!

பத்து மாதம் நீ என்னை
சுமக்காவிட்டாலும்
இருபது வருடம்
மார்பில் சுமந்தவர் நீங்கள்!!

என் முகத்தின் சிரிப்பாக,
உங்கள் பல
ஆசைகளை துறந்தவர் நீங்கள்!!

என் கண்ணில் வரும் துளி
கண்ணீரை கூட தாங்க முடியாத
இதயம் நீங்கள்!!

நான் தடுக்கி விழும் நேரங்களில்
என்னை விழாமல்
தாங்கிப் பிடித்தவர் நீங்கள்!!

நான் செய்யும் ஒவ்வொரு
செயலையும் பார்த்து
ரசித்தவர் நீங்கள்!!

நான் வாழ்நாளில் எங்கு சென்றாலும்
யாரை சந்தித்தாலும் உங்கள்
அன்பிற்கு ஈடாகது!!

என்றுமே என் வாழ்வில்
வாழும் தெய்வம் தாங்கள் மட்டுமே!!

**M.அகிலாண்டேஸ்வரி**
ஆங்கிலத்துறை - இரண்டாமாண்டு

---

**ஒன்றுக்கும் உதவாதவன்**

உருப்படாதவன், தண்டச்சோறு,
தடிமாடு என்று நம் முன்னால்
அதிகம்
திட்டினாலும்....

உடல் நலக்குறைபாடு ஏற்பட்டு
அயர்ந்து தூங்கும்
பொழுது நமக்கே தெரியாமல் நம்
கால்களை நீட்டிவிட்டு நமக்காக சில
துளி கண்ணீர் விடுவார்...
நமக்குப் பின்னால்
'தந்தை'...

**க.ப. சுதர்சன்**

---

**தன் குழந்தை**

தத்தித் தவழும் பொழுது
தவமாயிருந்த தவம் நிகழ்ந்ததே
என மகிழ்ச்சி...
புரியா மழலை பேசும் பொழுது
புதிய மொழியினைக்கண்டு மகிழ்ச்சி

முதல் நாள்
பள்ளி செல்லும் பொழுது
இனம் புரிய மகிழ்ச்சி...!

சிரிப்புகளைக் கண்டு மகிழ்ச்சி..
குறும்புகளைக் கண்டு மகிழ்ச்சி...

ஏன்!
முதியோர் இல்லத்திலும் மகிழ்ச்சி
காரணம்,
என் மகனே
என்னைஅழைத்து வந்ததான் என்று...

**கொ. மஞ்சுதா**

---

# கட்டுரை

## உலக சுற்றுச்சூழல் தினக்கட்டுரைகள்

**உலக சுற்றுச்சூழல் நாள்** ஐக்கிய நாடுகள் அவையால் ஆண்டு தோறும் சூன் 5 ஆம் நாள் புவிக்கோளையும்அதன் இயற்கையும் காப்பாற்றத் தேவைப்படும் சுற்றுச்சூழல் செயல்பாட்டைப் பற்றிய நேரடியான உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கொண்டாடப்படுகிறது. இது ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் சபையால்1972—ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச்சபை சார்பில் இந்நாளின் கொண்டாட்டங்களுக்குப் பொறுப்பாக ஐக்கிய நாடுகள் சூழல் திட்டம் செயல்படுகிறது.

நோக்கம்

சுற்றுச் சூழலின் முக்கியத்துவம் கடந்த சில பத்தாண்டுகளாகவே உலகம் முழுவதிலும் உணரப்படுகின்ற ஒன்றாக இருந்து வருகின்றது. மனித நடவடிக்கையால் சூழலில் ஏற்பட்டு வரும் விரும்பத்தகாத மாற்றங்களும் அதனால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளும் இது தொடர்பான நடவடிக்கைகளும் எடுக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளார். உலக சூழல் தின நிகழ்வுகளின் முக்கியமான நோக்கம், உலகம் தழுவிய அளவில் சூழலின் முக்கியதுவம், அரசியல் மட்டத்தில் கவனத்தை ஈர்த்து உரிய

நடவடிக்கைகளை எடுப்பதற்குத் துண்டுவதுமாகும்.

நீதியான, தாங்குநிலை சார்ந்த வளர்ச்சியை ஏற்படுத்துவதில் மக்கள் தங்கள் நேரடியன பங்களிப்பைச் செலுத்துவதற்கு அவர்களை ஊக்குவித்தல், சூழல் தொடர்பான விடயங்களில் மக்களுடைய மனப்போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முக்கிய பங்காற்ற வேண்டிய பொறுப்பு சமுதாயத்திற்கு உண்டு என்ற புரிந்துணர்வை உருவாக்குதல் பாதுகாப்பானதும், வளமுள்ளதுமான எதிர்காலத்தை பல்வேறு நாடுகளிலும் வாழுகின்ற மக்கள் பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதற்காகக் கூட்டு முயற்சிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்தல் ஆகிய நடவடிக்கைகளை இந்த நிகழ்வுகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

வரலாறு

உலக சுற்றுச்சூழல் தினமானது ஐ.நா பொதுச் சபை 1972 – ஆம் ஆண்டு நடத்திய மனித சூழலுக்கான மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

உலக சுற்றுச்சூழல் நாள் நிகழ்ச்சிகள்

பணியிடத்தில் ஆற்றல் பயன்பாட்டைக் குறைக்கத் தனி ஒவ்வொருவருக்கும் ஊக்கமூட்ட 2007-இல் இருந்து சிங்கப்பூரில் சூழல் செயற்பாட்டு நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. 2015 ஜூன் 5 –ஆம் நாளன்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி புதுதில்லியில் பந்தயச் சாலையில் உள்ள 7 ஆம் எண்ணிட்ட தம் இல்லத்தில் ஒரு மரகன்றை நட்டார்.

உலக சுற்றுச்சூழல் நாள் பாடல்

“புவிப்பண்” அபே கே என்பவரால் எழுதப்பட்டு 2013 – ஆண்டு ஜூன் மாதத்தில் உலக சுற்றுச்சூழல் நாளை முன்னிட்டு அன்றைய இந்திய அமைச்சர்கள் கபில்சிபல், சசித்தரூர் ஆகியோரால் புதுதில்லியில் வெளியிடப்பட்டது. ஐ.நா பொது அவையின் அலுவல் மொழிகளான அரபு, சீனம், ஆங்கிலம், பிரெஞ்சு, உருசியம், சப்பனியம் ஆகிய ஆறு மொழிகளில் புவியின் பாடல் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றை விட இந்தி, நேபால் போன்ற மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

கருப்பொருள்

ஒவ்வோராண்டும் உலகச் சுற்றுச்சூழல் நாளுக்கும் ஒரு

தனியான முழக்கத்தைத் தேர்ந்தெடுத்து கொண்டாடப்படுகிறது. இந்த முழக்கங்களைப் போலவே ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு கருப்பொருளும் உண்டு. 2009 – 20015 ஆண்டு வரை பரப்பிய கருப்பொருள்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2015 - ஆண்டிற்கான கருப்பொருள்

ஏழு பில்லியன் கனவுகள்; ஒரே கோள்; விழிப்பொடு நுகர்.

2014 – ஆண்டிற்கான கருப்பொருள்

சிறு தீவுகளும் காலநிலை மாற்றமும்.

முழக்கம்

குரலை உயர்த்து, கடல் மட்டத்தையல்ல.

2013 - ஆம் ஆண்டிற்கான கருப்பொருள்

- பரப்புரை ஒவ்வோராண்டும் பேரளவில் வீணாக்கப்படும் உணவுப் பொருள்களின் பால் கவனத்தை குவித்தது. இந்த உணவு சேமிக்கப்பட்டால், ஏராளமானோர்க்கு உணவு வழங்கி கரிமக்கால் தடத்தையும் குறைக்க முடியும். உணவப் பொருளை விரயமாக்கும் வாழ்முறைமை உள்ள நாடுகளின் பால் குறிப்பான கவனம் திருத்தப்பட்டது.
- உலகளாவிய உணவு விளைச்சலால் சூழலின் மீது ஏற்படும் ஒட்டு மொத்தத் தாக்கத்தையும் குறைக்க மக்கள் உண்ண விரும்பும் உணவின் தேர்வை அறிவிக்கும் உரிமையைப் பெறவைக்கும் குறிக்கோளையும் முன்வைத்தது.

2012 - ஆம் ஆண்டிற்கான கருப்பொருள்

- 2012 எத்தியோப்பியா, கோன்சோ நகரில் மாநாட்டு நிகழ்வு
- 2012 உலக சுற்றுச்சுழல் நாள் கருப்பொருள் பசுமைப் பொருளாதாரம்.
- இந்தப் கருப்பொருள் மக்களை தம் செயல்பாடுகளையும், வாழ்க்கைப் பாணியையும் சீர்தூக்கிப் பார்த்து பசுமைப் பொருளாதாரத்தில் அவை எப்படி பொருத்துகின்றன எனக் கருதுமாறு கேட்டுக் கொள்ளச் செய்கிறது. இந்த ஆண்டின் விழாக்கலை

விருந்தோம்பிய நாடு பிரேசில் ஆகும்.

2011 – ஆம் ஆண்டிற்கான கருப்பொருள்

- 2011 – ஆம் ஆண்டின் கருப்பொருள் காடுகள் - உன் சேவையில் இயற்கை- கடற்கரைத் தூய்மிப்பு. கண்காட்சிகள், திரைப்பட விழாக்கள், சமுதாய நிகழ்ச்சிகள், மேடை இசைக் கொண்டாட்டங்கள் எனப் பல்லாயிரம் செயற்பாடுகள் உலகளாவிய நிலையில் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆண்டின் நிகழ்ச்சியைச் பரந்து விரிந்த இந்திய முன்னின்று நடத்தியது.

2010 - ஆம் ஆண்டிற்கான கருப்பொருள்

- பல உயிரினங்கள் ; ஒரேகோள் ; ஒரே எதிர்காலம் என்பதே 200 இன் கருப்பொருளாகும்.
- 2010 உலக உயிரினப் பன்மைய ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. சமுதாய நிகழ்ச்சிகள், மேடை இசைக் கொண்டாட்டங்கள் எனப் பல்லாயிரம் செயற்பாடுகள் உலகளாவிய நிலையில் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆண்டின் நிகழ்ச்சியை ருவாண்டா முன்னின்று நடத்திக் கொடுத்தது.

2009 - ஆம் ஆண்டிற்கான கருப்பொருள்

- 2009 - இன் உலகச் சுற்றுச் சூழல் நாளின் கருப்பொருள் உன்கோள் உன்னைக் கேட்கிறது – கால நிலை மாற்றத்தை மாற்ற இணை ; உலகச் சுற்றுச்சூழல் நாள் பாடலாக மைக்கேல் ஜாக்சனின் ‘புவிப்பாடல்’ அறிவிக்கப்பட்டது. இது மெக்சிகோவால் நடத்தப்பட்டது.

**ரா. நந்தினி**
முதலாமாண்டு பிகாம் சிஏ–ஏ

---

**ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5-ஆம்** தேதி உலக சுற்றுச்சூழல் தின கடைபிடிக்கப்படுகிறது. 2009-ஆம் ஆண்டுக்கான உலக சுற்றுச்சூழல் தினத்தை வானிலை சவாலை எதிர்கொள்ள ஒன்றுபட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் கொண்டாட வேண்டும் என ஐ.நா சபை தெரிவித்தது. சுற்றுச்சூழல்

தினத்தன்று சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே ஐ.நா வின் நோக்கமாகும். அரசியல் கவனத்தையும் மற்றும் செயல் முறைகளை அதிகரிக்கவும் இந்த நாள் பயன்படுகிறது. உயிர்களின் வாழ்க்கை தொடர்பாக பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கு மனிதரை எதிர் கொள்ளச் செய்வதும் உலக சுற்றுச் சூழல் பிரச்சனைகளுக்கும் கல்விக்கும் அழுத்தம் கொடுப்பதும், சுற்றுச்சூழலைப் பேணுவதில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இத்தினத்தின் பிரதான நோக்கமாகும்.

1972- இல் சுவீடனின் தலைநகரான ஸ்ரொக்ஹோமில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித குடியிருப்பும் சுற்றாடலும் என்ற வரலாற்றுப் புகழ்மிக்க உலக மாநாட்டில் உலக சுற்றுச் சூழலின் முக்கியத்துவம், இயற்கை வளங்கள், அதன் பிரயோகம் என்பன பற்றி கலந்துரையாடப்பட்டது. மதன் முடிவில் ஜூன் 5-ஆம் தேதியை உலக சுற்றுச்சூழல் தினமாக பிரகடனப்படுத்தும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இத்தினத்தின் கொண்டாட்டங்களுப் பொறுப்பாக ஐக்கிய நாடுகள் கீழ் சுற்றுச் சூழல் திட்டம் செயற்படுகின்றது.

இயற்கை வளங்களான நீர்நிலைகள், காடுகள், வனாந்திரங்கள், வனசீவராசிகள், வளிமண்டலம், பறவைகள், சோலைகள், கடற்கரைகள் அனைத்தும் மனித குலத்துக்காக வடிவமைக்கப்பட்ட பொக்கிசங்களாகும். மனித குலம், விலங்கினம், பறவையினம், தாவரங்கள், கடல்வாழ் உயிரினங்கள் போன்றவற்றின் நல்வாழ்வு இந்த சுற்றுச் சூழலின் சமநிலையிலேயே தங்கியுள்ளது. இச்சமநிலையில் ஏற்படும் மாற்றங்களும் சுற்றுச்சூழலை மட்டுமின்றி உயிரினங்களின் வாழ்வுக்கும் அச்சுறுத்தலாகவும், ஆபத்தாகவும் அமைந்து விடுகிறது.

மரங்கள் மனிதர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். மனிதன் வாழ்வதற்கு மரங்கள் அத்தியாவசியம் என்பதைப் பலரும் உணருவதில்லை. மரங்கள் இல்லையெனில் நாம் இறந்து விடுவோம். இதனாலேயே சுற்றுச்சூழலாளர்கள் மரங்கள் தறித்து வீழ்த்தப்படுவதற்கு எதிராக பெரும் இயக்கங்களை முன்னெடுத்து

வந்திருக்கிறார்கள். மனிதர்களினால் செய்யப்படக்கூடிய மிகவும் மூர்க்கத்தனமான செயல்களில் ஒன்று மரங்களையும், காடுகளையும் அழித்து அதன் மூலம் பூமியை ஒரு பாலைவனம் ஆக்குவது தான். புவி வெப்பமடைந்து வருவதும் ஓசோனின் பட்டையில் ஓட்டை விழுந்துள்ளது என்ற தகவலும் சுற்றுச் சூழலின் சமநிலையில் ஏற்பட்ட பெரிய விளைவுகளாகும்.. பல்வேறு தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவுநீர் சுற்றுச்சூழலுக்கு மிகவும் கேடுகளை விளைவிக்கிறது.

மேலும், சுற்றுச் சூழல் தொடர்பாக காலநிலை மாற்றம், புவிக்கோளம், உஸ்ணமடைதல், ஓசோன் பட்டை பாதிப்பு, நன்னீர் வளம், கடற்கரைப் பிரதேசங்கள், காடழிப்பு, உயிரியல் மாறுபாடு, இரசாயன பாதுகாப்பு போன்றவை கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு தனிமனிதன் உள்ளத்திலும் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டியது மனிதன் உணர்ந்து கருமத்தை ஆற்ற வேண்டியதும் முக்கியமானதாகும். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளின் அடிப்படையில் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படுகிறது. அதற்கேற்ப இளைஞர் குழுக்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் தொழில் வர்த்தக ஊடக அமைப்புகளும் சுற்றுச்சூழலை மேம்படுத்தி அதை பாதுகாப்பதில் தங்களின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

**ந.சங்கீதா**

உயிர்த்தொழில் நுட்பவியல் துறை – முதலாமாண்டு.

---

**உலகசுற்றுச் சூழல் தினம்**

ஒவ்வொராண்டும் ஜுன் ஐந்தாம் நாள் கொண்டாடப்படுகிறது. இன்றைய நாளில் சுற்றுச்சூழல் எப்படி பாதுகாக்கப்படுகிறது என்று இக்கட்டுரையில் காண்போம்.

சுற்றுச்சூழலின் நிலை

இன்றைய நாட்களில் சுற்றுச்சூழல் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதை நாம் பாதுகாக்க எந்த முயற்சியும் எடுப்பது இல்லை. நம் வீட்டுக்

குப்பைகளைக் கூட சரியான முறையில் வெளியேற்றுவதில்லை.

நிலம் மாசுபடுதல்

குப்பைகளையும் மற்றும் தேவையற்ற பொருட்களையும் நாம் முறையாக வெளியேற்றுவதில்லை. அதனை நிலத்தில் போடுவதால் நிலம் மாசுபடுகிறது. அதனால் நிலத்தின் வளம் கெடுகிறது. நிலம் மாசடைவதால்
உணவுப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு உண்டாகும்.

காற்று மாசு அடைதல்

மசுபடுதலில் காற்றையே அதிகமாக மாசுபடுத்துகிறோம். வாகனங்களின் மூலமாகவும் அதிலிருந்து வெளியேறும் புகையினாலும், ரப்பர் டையர்களை எரிப்பதன் மூலமாகவும் காற்றை மாசுபடுத்துகிறோம். இதனால் ஓசோனில் ஓட்டைகள் உண்டானது. அதனால் தற்போது கால நிலைகளும் மாறிவிட்டது.

நீர் மாசுபாடு

நீர் மிகவும் அத்யாவசியமானது.. நீர் இல்லாவிட்டால் மனிதனின் வாழ்க்கை முற்றிலும் மாறிவிடும் அது தெரிந்தும் நாம் அதை விடுவதில்லை. அதில் கழிவுகளை கலப்பது, வீட்டு விலங்குகளை குளிப்பாட்டுவது போன்ற முறைகளில் நீரை நாம் மசுபடுத்திக் கொண்டு வருகிறோம்.

“சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்
வளம் பெறும்!!”

என்ற வரிகளுக்கேற்ப இனியாவது சுற்றுச்சூழல் மாசுபாடு அடைதல் போன்ற செயல்களைச் செய்யாமல் முறையாக சுற்றுச் சூழலைப் பேணிக்காக்க உறுதி கொள்ள வேண்டும்.

**த.இனியன்**

முதலாமாண்டு பிபிஏ–பி

---

**இந்த உலகம் முதலில்** சுற்றுப்புறச் சீர்கேட்டால் எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும், நம் உலகம் எப்படியல்லாம் சீரழிந்துள்ளது என்பதையும் அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் இக்கட்டுரையில் காணலாம்.

இருட்டில் உள்ள கிராமங்களின் வாழுவும் கொடுமையும்

கிராமங்களில் வாழும் மக்கள் பழைய துணிகளை எரித்தும் விலங்குகளை நீரில் குளிக்க வைத்தும் சுற்றுச் சூழமை மாசுபடுத்துகின்றனர்.

மாசு கட்டுப்பாட்டால் உலகம் இருண்ட நிலை

பழங்காலத்தில் மக்கள் மாட்டு வண்டி, குதிரை வண்டு, கழுதை மற்றும் ஒட்டகத்தால் பயணம் செய்வார்கள். அதனால் பெரிய அளவில் காற்றில் மாசு ஏற்படவில்லை. ஆனால் இன்றோ இங்கிருந்து அருஇல் செல்வதற்குக் கூட மோட்டார் வண்டி என்றால் எவ்வளவு மாசு ஏற்படும் என்பதை சிந்தியுங்கள்! அதனால் நம் பூமியின் மேல் உள்ள ஓசோன் மண்டலத்தில் ஓடஒ விழுந்திருக்கிறது.

வாகனங்கள் மட்டும் போதாதென்று தொழிற்சாலைகளிலிருந்து வரும் கரும்புகையினால் ஏற்படும் விளைவுகள் கொஞ்சமா? இல்லை! இல்லை! இதனால் உயிரினங்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்படும். மலர்கள் தன் நறுமணத்தை இழந்து வாடிவிடும். நாம் உண்ணும் காய்களில் காற்றுப்பட்டு வைட்டமின் - சி என்ற சத்துப்பொருளை அழித்து விடும். ஆகவே சமுதாய நலன் கருதி வாகனங்கள் மட்டுமல்ல சுற்றுப்புறச் சீர்கேட்டை ஏற்படுத்தும் எல்லாவற்றையும் குறைவாய்ப் பயன்படுத்தினால் இவ்வுலகம் ஒருவகையில் வெண்மை அடையும்.

கட்டுப்படுத்தும் முறை

இந்த சுற்றுச்சூழலை கட்டுப்படுத்த வழியுண்டு. இதனை நிறுத்த மக்களால் மட்டுமே முடியும் இதற்கு முதலில் மக்களிடம் விழிப்புணர்வு செய்ய வேண்டும். ஏனெனில் மக்கள் மட்டுமே நம் நாட்டின் அழிக்க முடியாத பெரும் சக்தி. ஆகவே இதற்கு முதல் கட்ட வீதமாக மரம் வளர்ப்பதும் அதனைப் பாதுகாப்பதைப் பற்றிப் பொதுமக்களிடம் நன்கு எடுத்துரைக்க வேண்டும். எனவே விழிப்புணர்வு மட்டுமே மக்களிடம் அந்த குறிப்பிட்ட செய்தியைக் கொண்டு சேர்க்கும்.

இதில் முதலில் வளர்ந்து வரும் இளைஞர்களுக்கே இதை கூறப்படவேண்டும். ஏனெனில் இளைஞர்கள் தான் நம் நாட்டின் தூண்கள் என பல அறிஞர்கள் கூறியுள்ளனர். ஆகவே இளைய சமூகத்தினர் மற்றவர்களிடம் சுற்றுச்சூழல் மாசுபாடு அடைவதனால் ஏற்படும் தீமைகளை எடுத்துரைக்க வேண்டும்

முடிவுரை

சுற்றுச்சூழலைப் பாதிக்கும் காரணிகளைக் கண்டறிந்து

அவற்றை இனியாவது செய்யாமல் நம்மைச் சுற்றியுள்ள் பகுதிகளை தூய்மையாக வைத்திருப்பது நமது ஒவ்வொருவரின் கடமையாகும்.

**து. தமிழ்ச்செல்வன்**
கணிப்பொறி அறிவியல்-இரண்டாமாண்டு-ஆ பிரிவு

---

**'சுத்தம் சுகம் தரும்',** 'கூழானலும் குளித்துக் குடி – கந்தையானலும் கசக்கிக் கட்டு' போன்ற பழமொழிகள் உடல் தூய்மையை வலியுறுத்துகின்றன. அது போல் சுற்றுப்புறத் தூய்மையும் மிக முக்கியமானது. அதன் மூலம் சமுதாயம் முழுமைக்கும் நன்மை ஏற்படும். அது பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

சுற்றுப்புறத் தூய்மை

வீட்டில் வாழும் மக்களுக்கு அண்டை வீடு, வீதி, பள்ளி, அலுவலகம், கோயில், திரையரங்கு, பேருந்து நிலையம், பூங்கா, விளையாட்டுத் திடல் போன்ற இடங்களெல்லாம் சுற்றுப்புறங்களாகும். இவை அனைத்தையும் தூய்மையாக வைத்திருப்பதே சுற்றுப்புறத் தூய்மையாகும். சுற்றுப்புறம் தூய்மையாக இருந்தால் தான் நாமும் தூய்மையாக இருக்க முடியும். நல்வாழ்வு வாழ முடியும்.

சுற்றுப்புற மாசுபாடு

சிற்றூர்களில் குளம் குட்டைகளில் இருந்து குடிநீர் எடுக்கப்படுகிறது. குளம், குட்டைகளில் ஆடு, மாடுகளைக் குளிப்பாட்டுகின்றனர் நம்மக்கள். அதுமட்டுமின்றி மக்களும் அதில் குளிக்கின்றனர். இவ்வாறு பப வழிகளில் சிற்றூர்களில் உல்ல நீர்ரிலைகள் மாசுபாடடைகின்றன. பேரூர்களிலும், நகரங்களிலும் கழிவுப்பொருட்களைக் கலப்பதால் குடிநீர் மாசுபடுகிறது.

இவ்வாறு மாசுபடுத்தப் பெற்ற குடிநீரைக் குடித்தால் நோய் தொற்று வர வாய்ப்புள்ளது. நல்வாழ்வு கெடுகிறது. எனவே, நீர் நிலைகளில் கழிவுப் பொருட்கள் கலக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

பேரூர்களிலும், நகரங்களிலும் போக்குவரத்து ஊர்திகள் விடுகின்ற புகையும், தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் பெருமளவு புகையும், கழிவுப் பொருட்களும் காற்றல் மாசு ஏற்படுகிறது. நாம் சுவாசிக்கும் போது மூச்சுக்காற்றில் தூய்மைகெடுவதால் பல வகையான நோய்கள் உண்டாகுகின்றன. நகர

வாழ்க்கை என்பது நரக வாழ்க்கையாகிவிட்டது.

சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாப்பது எப்படி?

வீதிகளில் கண்ட இடங்களில் எச்சில் துப்புதல், சிறுநீர்க் கழித்தல், சுற்றுப்புறத் தூய்மையைக் கெடுக்கும் கழிவுப் பொருட்களையும், அழுகல் பொருட்களையும் தெருக்களில் எறியாமல் குப்பைத் தொட்டிகள், குப்பைக் கழிவுகள் போன்றவற்றில் போடும் பழக்கததைக் கையாள வேண்டும். கழிவுநீர் வீட்டின் பக்கத்தில் தேங்காமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

மேலும், கல்வி பியிலும் பள்ளி, வழிபடும் கோயில், களிப்பூட்டும் திரையரங்குகள் போன்ற பொது ஈடங்களில் தூய்மையைப் பேணிக்காக்க வேண்டும். காற்றைத் தூய்மைப்படுத்த மரங்கள் அதிகமாகத் தேவை. நாம் வெளியிம் கெட்ட காற்றை எடுத்துக் கொண்டு நமக்குத் தேவையான நல்ல காற்றைத் தருவது மரங்களேயாகும். எனவே மரங்களைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும்.

இப்படிப் பலவகைகளிலும் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவதால், பல விதமான புதுப்புது நோய்கள் உண்டாகி உடல் நலத்தைப் பாதிக்கின்றன. எனவே, ஒவ்வொருவருக்கும் சுற்றுச்சூழல் பேணி நல்ல சுகதரமான வாழ்வு வாழ ஒத்துழைப்போம்.

---

## குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு தின கட்டுரைகள்

**நாட்டில் பிறந்த அனைவருக்கும்** உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம், வாழ ஒரு தொழில், வருமானம் ஆகியவற்றை அடிப்படைத் தேவைகள் என்பர். அரசியல் நிறைவேற்ற வேண்டிய அவசியத்தை கட்டியங் கூறி நிற்கிறது. ஆனால் நடைமுறையில் நாட்டில் திட்டங்களும், வளர்ச்சிகளும், வரவு – செலவும் மக்கள் தொகைக் கணக்கு, புள்ளி விவரங்கள் தவிர்த்த எதனோடும் சராசரி உழைக்கும் மக்களை கவனப்படுத்தாதாகவே அமைந்து விடுகின்றன. இச்சூழலில் தான் குடும்பத்தில் ஆண்-பெண் இருவருக்கும் உழைக்கும் வாழ வசதியற்ற நிலையில் தங்களது

குழந்தைகளையும் உழைப்பில் ஈடுபடுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடுகிறது. எந்தப் பெற்றோரும் விரும்பி தம் குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதில்லை. மாறாக வாழ்க்கை நிர்பந்தமே காரணமாக அமைந்துவிடுகிறது.

பொதுவரையறையில் அரச்யல் அமைப்புச் சட்டம் பதினான்கு வயத்க்குட்பட்ட அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்து கல்லி வழங்க வேண்டியது தவிர்க்க முடியாதக் கடமை என கண்டிப்புடன் கூறுகிறது. ஆனால் உணவு விடுதிகளில், வீட்டு வேலைகளில், வாகன பழுது நீக்குமிடங்களில், ஆடுமாடு மேய்தல் தொழிலில், தீப்பெட்டி தயரித்தல் இடங்களில், நெசவுத் தொழிலில், பாரம்பரியத் தொழில்கள் செய்யுமிடங்களில் சிறுவர் சிறுமியரே அதிகளவில் பணிபுரிகின்றனர். குழந்தைத் தொழிலாளர்கள் வேலை தடைச்சட்டம் விழிப்புணர்வு பரப்பல் முதலிய எல்லாம் இருந்தும் இம்முறையில் நீடிப்பது நாகரீகமுள்ள சமூகத்திற்கான சவாலாகவே அமைகின்றது.

வறுமை – வேலையின்மை

குழந்தைத் தொழிலாளர் உருவாவதற்கு அடிப்படைக் காரணம் பெற்றோரின் வறுமை நிலையும் வேலையில்லாத் திண்டாட்டமுமேயாகும். எவ்வளவுதான் சமாதானங்கள் சொன்னாலும் இந்நிலையில் மாற்றம் வராமல் எதுவும் சாத்தியமில்லை.

குழந்தைத் தொழிலாளர் பற்றிப் பேசுவோர் குழந்தைகளுக்கான கல்வி, உணவு குறித்து அக்கறைப்படுகின்ற அளவுக்கு பெற்றோரின் வாழ்வாதாரம் குறித்து கவனம் கொள்வது இலலை. குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகும் பகுதியினருக்கு உரிய வேலைவாய்ப்பு, மாற்று வேலை, குறைந்தபட்ச நிரந்தர வருவாய் ஆகியவற்றை உறுதி செய்யாமல் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பது குறித்துப் பேசிப் பயனில்லை. ஏனெனில் குழந்தைத் தொழிலாளர்களில் சுமர் 80. சதவிகிதம் பேர் பெற்றோரின் வறுமை பொருட்டே கல்வியினின்றும், இயல்பான குழந்தைமையிலிருந்தும் விலக்கப்பட்டு உழைப்பாளிகளாக ஆக்கப்படுகிறார்கள்.

கல்வி முறை

குழந்தைகள் இயல்பிலேயே பலவற்றைக் கற்றுக் கொல்கிறார்கள். பள்ளி என்பது எண்கள், எழுத்துக்கள் போன்ற அறிவு முறைமையைச் சுட்டி முறைப்படுத்துகின்றன. ஆனால் இன்றைய கல்வி முறையானது குழந்தைகளுக்கு எவ்வித செயலாக்கத்தையும் அளிப்பதில்லை. நம்பிக்கை, தன் ஆளுமை, சாதிக்கும் திறன் என் எல்லாவற்றையும் குழந்தைகளுக்கு வழங்க முடியாததாக நம் கல்வி இருக்கிறது.

பள்ளியில் படிக்கும் பதினைந்து வயதுச் சிறுவன் ஒருநாள் குறிப்பிட்ட பேருந்தை, ஆட்டோவை தவற விட்டுவிட்டச் சூழலில் வீடு வந்து சேர்வதற்குள் அவனும் அவனது பெற்றோரும் படாதபாடுபடுவதைப் பார்க்கிறோம். ஆனால் கல்வியறிவற்ற குழந்தைகளின் உழைப்பையும் காணுகிறோம். கல்விக்கும் உழைப்பிற்கும் ஏற்பட்ட இடைவெளி கல்வி பயின்றதும் பரிசாக்க் கிடைக்கும் வேலையின்மை ஆகியன பள்ளி மீதும், கல்வி மீதும் நாட்டமற்ற தன்மை குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் உருவாகுவதை நாம் உணர வேண்டும்.

பிற காரணங்கள்

பெற்றோர்கள் குடிப்பழக்கம், சூதாட்டம் போன்ற தீய பழக்கத்தினால் பாதிக்கப்படும் குழந்தைகள், பெற்றோரை இழந்த அனாதைக் குழந்தைகள், ஒரு பெற்றோர் குழந்தைகள், குற்றவாளி பெற்றோரின் குழந்தைகள் போன்ற நிலைகளில் உள்ள குழந்தைகள் உழப்பாளிகளாக மாறி விடுவது தவிர்க்க முடியாமல் நடந்தேறுகிறது.

என்ன செய்யலாம்?

உலகமயமும் நுகர்வுக் கலாச்சாரமும் உருவாக்கி வரும் மனிதத் தன்மையற்ற வணிகச் சமூகம் குறித்த எச்சரிக்கையையும், குழந்தைகளின் மனநலம்- உடல் நலன் குறித்த பரப்பு நிகழ்வுகளையும் செய்ய வேண்டும். தலித்துகள்,பெண்கள், பழங்குடிகள் பற்றி குறிப்பாகப் பேசுவது போல் குழந்தைகள் குறித்துப் போசியாக வேண்டும்.

**ரா.கீர்த்தனா**

பிபிஏ-பி – முதலாமாண்டு

---

**குழந்தைத் தொழிலாளர்களுக்கு** எதிராகக் கொண்டுவரப்பட்ட பொதுவான முதல் சட்டம்

தொழிற்சாலைகள் சட்டம் அனைத்தும் 19-ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் பிரிட்டனில் அமல்படுத்தப்பட்டது. ஒன்பது வயதுக்குட்பட்ட குழந்தைகள் பணி புரிவதற்கு அனுமதிக்கப்படவில்லை. 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் பணி செய்ய அனுமதிக்கப்பட்டனர். குழந்தைத் தொழிலாளர்கள் என்பது தொடர்ந்து நீடித்த பணியில் குழந்தைகளை ஈடுபடுத்துவதாகும். எல்லா நாடுகளிலும் சட்ட விரோதமாகக் குழந்தைத் தொழிலாளர்கள் மணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பெரிய சர்வதேச நிறுவனங்களில் கூட இக்கொடுமை நடைபெறுகிறது. கஹதோதக் குழந்தைத் தொழிலாளர் பணியமர்த்தப்படுவது வரலாற்றுக் காலத்தில் கூறப்பட்டாலும், உலகளாவிய கல்வி முறை தொழிற்துறையில் ஏற்பட்ட வேலை மாற்றம், வேலையாளர்களுக்கும் குழந்தைகளின் உரிமைகளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்துக்களால் குழந்தைத் தொழிலாளர்கள் முறை தற்போது உலகமெங்கும் பரவியுள்ளது. வளர்ச்சியடைந்த பல நாடுகளில் குழந்தைத் தொழிலாளர்களின் வயது மாறுபட்டதாக உள்ளது. பள்ளிவேலை மற்றும் வீட்டுவேலை தவிர பிற வேலைகளுக்கு குழந்தைகள் பணியமர்த்தக்கூடாதென வளர்ச்சியடைந்த நாடுகள் கூறுகின்றன.

குறிப்பிட்ட வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளை கண்டிப்பாக பணியமர்த்தக் கூடாது. இந்த குழந்தைத் தொழிலாளர் வயது வித்தியாசம் ஒவ்வொரு நாட்டிற்கும் மாறுபடுகிறது. ஐக்கியநாடுகளின் குழந்தைத் தொழிலாளர் சட்டப்படி 16 வயது நிறைவு பெறுவதற்கு முன்பாக குழந்தைகளைப் பணியில் அமர்த்தக் கூடாது என்பதுடன், பெற்றோரின் சம்மதம் இல்லாமல் வேலைக்கு அனுமதிக்கக் கூடாது என்பதாகும்.

ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச தொழிலாளர்கள் அமைப்புகள் குழந்தைத் தொழிலாளர்களின் உழைப்பி சுரண்டலைக் கவனத்தில் கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமை பாதுகாப்பின் உடன்படிக்கை 32-ஆவது விதியில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே உலகம் முழுவதிலும் 250 மில்லியனுக்கும் மேற்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர் என்பது நினைவு கூறத்தக்கது.

**கோமதி.இ**

---

**'இளமையில் கல்' என்கிறது** முதுமொழி. ஆனால் பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதில் பாலகர்கள் வேலைக்குச் அனுப்பப்படுகின்றனர். இதனால் அவர்கள் எழுத்தறிவைப் பெறத்தவறுவதோடு வாழ்க்கைக்குத் தேவையான அறிவைப் பெறவும் இயலாமல் கோகிறது. பாலகர்களை வேலைக்கு அனுப்புவதைத் தடை செய்யவே ஏற்படுத்தப்பட்டதே குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு சட்டமாகும்.

வறுமையே காரணம்

இளம் வயதில் குழந்தைகளுக்கு வாழ்க்கையைப் பற்றி விழிப்புணர்வு இருப்பதில்லை. எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பது தெரியாது. எனவே அவர்களை வழிநடத்தும் பொறுப்பு பெற்றோர்க்கே உரியது. சில குடும்பங்களில் தந்தை மதுவுக்கு அடிமையாகி விடுவதனால் குழந்தைகள் பணிக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பணிக்குச் செல்ல வற்புறுத்துவது பெரும்பாலும் வறுமையின் காரணமாகவே ஆகும். சில பெற்றோர் பணத்தின் மீதான ஆசையினால் குழந்தைகளை பணிக்கு அனுப்புகிறார்கள். தற்போது பணம் கிடைக்கிறது என்று அவ்வாறு செய்வதால் குழந்தைகளின் எதிர்காலம் வீணாகிறது என்பதை அவர்கள் நினைத்து பார்ப்பதில்லை.

நம் கர்மவீரார் காமராசர் அவர்கள் ஏழ்மையினால் குழந்தைகளின் கல்வி தடைபடக்கூடாது என்ற உயர்ந்த நோக்கிலேயே பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இருப்பினும் இன்றளவும் குழந்தைகள் பட்டாசுத் தொழிற்சாலை, பீடி சுற்றுதல் போன்ற பணிக்கு வற்புறுத்தப்படு கிறார்கள் என்பது உண்மையே.

தீமைகள்

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்ற பழமொழிக்கு ஏற்ப குழந்தைகளுக்கு இலம் வயதில் கல்வி கற்பிக்க வேண்டியது பெரியவர்களின் கடமை. அவ்வாறு செய்யத் தவறின் அது

அவர்கள் எதிர்காலத்தை பாழாக்குவதேயாகும்.

பெற்றோர்களின் கடமை

குழந்தைத் தொழிலளர்கள் முறையை ஒழிப்பதன் முக்கிய பொறுப்பு பெற்றோர்கலுக்கே உரியது. வறுமையைக் காரணம் காட்டியோ, பணத்தேவையைக் காரணம் காட்டியோ குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் பணிக்கு அனுப்பக் கூடாது. அன்றாடத் தேவைகயைக் குறைத்தேனும் அவர்களை கல்வி கற்க அனுப்ப வேண்டும். இதற்காக அரசு அளித்துவரும் நலத்திட்டங்களை அறிந்து அதிகாரிகளை அணுகி தேவையான உதவிகளைப் பெற வேண்டும்.

ஒருநாட்டின் எதிர்காலம் அதன் குழந்தைகளிடம் இருக்கிறது என்பதை எல்லோரும்ப்ரிந்து கொள்ள வேண்டும். குழந்தைகள் பெற வேண்டிய கல்வியை அவர்களுக்கு அளிக்க வேண்டிய பொறுப்பு இந்த சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு மனிதருக்கும் உரியது என்பதை அறிந்து அவர்களை பள்ளிக்கு அனுப்ப வேண்டும்.

**பா. தீபிகா**

பிபிஏ-முதலாமாண்டு-பி பிரிவு

**ஜுன் 12, உலகம் முழுவதும்** உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது. இப்படி ஏராளமாக தினங்கள் அனுசரிக்கப்படுவதால் என்ன பயன் என்ற கேள்வி எழுவது நியாயமே. இப்படிப்பட்ட தினங்கள் நம்மில் நிலவும் அவலங்களை நினைவுறுத்தி நமக்கு இந்த சமுதாயத்தில் செய்ய வேண்டிய கடன்கள் இருக்கிறது என்பதனை நினைவுறுத்தவே.

சென்ற வருடம் கணக்கெடுப்பின் படி உலகில் சுமர் 218 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள் .இதில் பாதிக்கும் மேபட்டோர் பெண்குழந்தைகள் எனதுதான் நம்மை உலுக்கும் செய்தி.

ஈந்த வருடத்தின் நோக்கம் குழந்தைத் தொழிலாளர்கள் விவசாயத்துறையில் இருந்து மீட்க வேண்டும் என்பதே. குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம் இருப்பது விவசாயத்துறையில் தான். இந்தியாவில் சுமர் 15 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக வாழ்கின்றனர். தங்கள் எஜமானர்களுக்கு விசுவாசமாக விவசாயத்தில் துணை

புரிகின்றனர். ஆடு மாடுகளை மேய்த்தும், பயிர்களை பராமரிப்பதுமான பல வேலைகளை பள்ளி சென்று கல்வி பெறும் நேரத்தில் செய்கின்றனர். நம் வீட்டுக்குழந்தை நன்றாக இருக்க ஆசைப்படுகிறோமோ அதே போல அனைத்து குழந்தைகளும் நலமாய் இருக்க வேண்டும் என்று ஆசை கொள்ள வேண்டும்.

**செ.சத்தியநாரயணன்**

பிபிஏ-பி- முதலாமாண்டு

---

## குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு

தினமாக உலகம் முழுவதும் ஆண்டுதோறும் ஜுன் 12-ஆம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகளின் ஓர் அங்கமான பன்னாட்டு தொழிலாளர் அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த நாள் குழந்தை தொழிலாளர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த 2002-ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஐ.எல்.ஓ வின் 138 மற்றும் 182 ஆவது உடன்படிக்கையின்படி ஏற்பினான் தூண்டப்பட்டு இந்த நாள் உருவாக்கப்பட்டது.

நோக்கம்

இதன் அடிப்படையில் குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றப்பட வேண்டியதன்அவசியத்தை உணர்த்த இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. 2006 அக்டோபர் 06 ஆம் தேதி முதல் வீடு, சாலையோரக் கடைகள் ஓட்டல்கள் போன்ற இடங்களில் வயதில் குறைந்த சிறுவர், சிறுமியர்களை வேலைக்கு அமர்த்த மத்திய அரசு தடைவித்துள்ளது.

குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை மூன்று வகையாகப் பிரித்துள்ளது

- உடல் ரீதியான பாதிப்பு
- உளவியல் அல்லது மனரீதியான பாதிப்பு
- உணர்வு மற்றும் சமூக ரீதியான பாதிப்பு

உடல் ரீதியான பாதிப்பு

கொடிய வறுமை, ஊட்டச்சத்துக் குறைபாடு, கல்வியறிவு பெற்முடியாத நிலை, உடல் நலனை பாதிக்கக் கூடிய ஆபாத்தான சூழல், காற்றோடம் இல்லாத குறுகிய அறை போன்றவை சிறார்களின் உடல் நலனைப் பெரிதும் பாதிப்பதால் ஆஸ்துமா,

காசநோய் போன்ற ஆபத்தான நோய்களின் தாக்குதலுக்கு இலக்காகின்றார்கள்.

உள்வியல் அல்லது மன ரீதியான பாதிப்பு

மனரீதியான வளர்ச்சி என்பது எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் நடைமுறை வாழ்க்கை முறயினைப் பற்றிய பொதுவான அறிவு போன்றவை உள்ளடக்கியதாகும். இவற்றில் ஏற்படும் மாற்றங்கள் சிறார்களை மிகவும் கடுமையாக பாதிக்கின்றன.

உணர்வு மற்றும் சமூக ரீதியான பாதிப்பு

கல்வியறிவு பெறமுடியாமல் வறுமையை விரட்ட எண்ணி சிறுவயது முதல் குறைந்த சம்பளத்திற்கு வேலைக்குச் செல்லும் இவர்களால் சமுதாயத்தில் கடைசி வரௌ ஒருநல்ல நிலையை அடைய முடியாமல் சமுகத்தால் புறக்கண்க்கப்படும் நிலைமைக்கு தள்ளப்படுகின்றனர்.

கவனம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்கள்

- சிறார் அனைவரும் தொடக்க கல்வி கட்டாயம் ஆக்கப்பட வேண்டும்.
- சிறுவர்களின் தொழில் திறமைகளைக் கண்டறிந்து அத்திறமைகளை வளர்க்க பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்.
- கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.
- பள்ளி மற்றும் கல்லூரிகளில் குழந்தைத் தொழிலார் ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு முகாம்களை நடத்தலாம்.
- குழந்தைகள் உங்களுக்குப் பிறந்தவர்கள் தான். ஆனால் உங்களுக்காக மட்டுமே பிறந்தவர்கள் அல்ல என்பதைப் பெற்றோர்களுக்கு புரிய

வைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**ச.கிருத்திகா**
முதலாமாண்டு-
உயிர்த்தொழில்நுட்பவியல்துறை

---

# இரத்தான தின கட்டுரை

**ஜூன் 4-ஆம் தேதி உலக இரத்த** நாள்(நொர்ல்ட் ப்லோட் டொனொர் டய்) பின்பற்றப்படுகிறது. இந்த நாள் உலகம் முழுவதிலுமுள்ள அனைத்து நாடுகளிலும் கடைபிடிக்கப்படுகிறது. இந்த அற்புதமான விழிப்புணர்வு நாளை நொர்ல்ட் ஹெல்த் ஓர்கனிசடிஒன் செயல்படுத்தி வருகிறது.இதுவரை 108 மில்லியன் மக்கள் இரத்த தானம் செய்துள்ளதாக அறியப்படுகிறது. ஒவ்வொரு வருடத்திற்கும் அந்த இரத்தம் 65 சதவிகித மக்களுக்குப் பயனளிக்கிறது. எனினும் 2025 -ஆம் ஆண்டிற்குள்ளாக 100 சதவிகித இலக்கினை எட்டும் என நொர்ல்ட் ஹெல்த் ஓர்கனனிசடிஒன் அமைப்பு கூறுகிறது.

உலக இரத்தநாள் அன்று பல்வேறு தரப்பு மக்களும் இரத்த தானம் செய்கின்றார்கள். அவ்வாறு அளிக்கப்படும் இரத்தம் இரத்த வங்கிகளில் சேமிக்கப்படுகிறது. என்றாவதொருநாள் அவர்களுக்கு ஆபத்து வருமானால் அவர்களுடைய இரத்தமோ, பிறரின் இரத்தமோ உதவிகரமாக இருக்கும்.

வாழ்க்கைக்கு சேமிப்பு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் இரத்ததை சேமிப்பது ஆகும்.

**எம்.லோகநாதன்**
முதலாமாண்டு பிபிஏ-பி

---

# பொது அறிவு

## இந்த மாதத்தின் முக்கிய தினங்கள்

➲ **சர்வதேச குழந்தைகள் தினம்** (International Children's Day) உலகக் குழந்தைகளின் நலனுக்காக 1925ஆம் ஆண்டில் ஜெனிவாவில் மாநாடு நடைபெற்றது. உலகில் வாழும் குழந்தைகளின் நிலையைப் பற்றி விவாதம் செய்யப்பட்டது. குழந்தைகளின் நலனில் அக்கறை காட்டுவதற்கான பல்வேறு ஆலோசனைகளும், முடிவுகளும் எடுக்கப்பட்டன. இதன் காரணமாக பெரும்பான்மையான நாடுகள் ஜூன் – 1 ஐ சர்வதேச குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகின்றன.

➲ **ஆக்கிரமிப்பால் பலியான ஒன்றுமறியாத குழந்தைகள் தினம்** (International Day of Innocent Children Victims of Aggression) இனக்கலவரம், மதக்கலவரம், போர், வன்முறை போன்ற செயல்களால் அதிகம் பாதிக்கப்படுவது ஒன்றுமறியாத அப்பாவி குழந்தைகளும், பெண்களும் தான். போரின்போது பள்ளிக் கட்டிடங்களே குறிவைத்து தாக்கப்படுகின்றன. இதனால் குழந்தைகள் பாதிக்கின்றனர். ஐ.நா.வின் முடிவுப்படி 1984-ஆம் ஆண்டிலிருந்து ஆக்கிரப்பால் பலியான ஒன்றுமறியாத குழந்தைகள் தினம் ஜூன் 4ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது.

➲ **உலகச் சுற்றுச்சூழல் தினம்** (World Environment Day) உலகச் சுற்றுச்சூழல் தினம் 1972ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. எங்கு மக்கள் சுத்தமான மற்றும் சுகாதாரமான சுற்றுப்புறச்சூழலில் வாழ்கிறார்களோ, அங்கு நன்றாக வேலை செய்வார்கள். அங்கு வாழும் குழந்தைகள் நன்கு படிப்பார்கள். சுற்றுச்சூழல் பிரச்சினைகளை மக்களிடம் எடுத்துக் கூறி, சுற்றுச்சூழலின்மீது தனிக்கவனம் செலுத்தும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.

➲ **உலகப் பெருங்கடல் தினம்** (World Ocean Day) சுற்றுச்சூழல் பாதிப்பால் கடலும் பாதிப்படைகிறது. இதனால் கடலில் வாழும் உயிரினங்களும் அழிகின்றன. கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்கவும், கடல் உணவுகள் பற்றி அறியவும், பெருங்கடலுக்கு மரியாதை செலுத்தவும் உலகப் பெருங்கடல் தினம் கொண்டாடப்படுகிறது. 1992ஆம் ஆண்டு, ஜூன் 8 அன்று பூமியைப்

பாதுகாப்போம் என்கிற உடன்படிக்கை உருவானது. அன்றைய தினத்தை உலகப் பெருங்கடல் தினமாகக் கொண்டாடுகிறோம்.

- **எஃப்.எம். வானொலி ஒலித்த நாள் (F.M. Radio Transmission Day)** பல நிகழ்ச்சிகளை பண்பலை வானொலி நிலையங்கள் காலை தொடங்கி நள்ளிரவு வரை ஒலிபரப்புகின்றன. வானொலியின் இரைச்சலைக் குறைத்து எஃப்.எம். ஒலிபரப்பு அறிமுகம் ஆனது. இதனை எட்வின் ஆர்ம்ஸ்ட்ராங் என்கிற அமெரிக்கர் கண்டுபிடித்தார். 1933ஆம் ஆண்டில் எஃப்.எம். ரேடியோவுக்கான காப்புரிமை பெற்று 1935, ஜூன் – 1 அன்று பொதுமக்களுக்காக ஒலிபரப்பப்பட்டது.
- **உலகக் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு தினம் (World Day Against Child Labour)** உலகக் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு தினம் 2002ஆம் ஆண்டுமுதல் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் குழந்தைத் தொழிலாளர்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றனர். சட்டங்கள் இருந்தாலும் இதனை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை. உலகம் முழுவதும் மில்லியன் கணக்கான குழந்தைகள் மிகவும் ஆபத்தான வேலைகளை செய்து வருகின்றனர். குழந்தைத் தொழிலாளர்களை அதிகம் கொண்ட நாடாக இந்தியா உள்ளது.
- **உலக இரத்தக் கொடையாளர்கள் தினம் (World Blood Donor's Day)** இரத்தத்தில் உள்ள வகைகளை முதன்முதலில் கார்ல் லான்ட்ஸ்டைனர் என்பவர் 1901ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார். இதன்மூலம் மனித இரத்தத்தை மற்றொருவருக்கு செலுத்துவது சாத்தியமானது. இரத்த தானம் செய்வதன்மூலம் பலரின் உயிர்கள் காப்பாற்றப்படுகிறது. இரத்தத்தை பணம் பெறாமல் தானம் வழங்குபவர்கள் உள்ளனர். அவர்களை கௌரவிக்கவே உலக இரத்தக் கொடையாளர்கள் தினம் கொண்டாடப்படுகிறது.
- **உலக மூத்தோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு தினம் (World Elder Abuse Awareness Day)** உலகளவில் 60 வயதைக் கடந்த முதியோர்களின் எண்ணிக்கை 1995ஆம் ஆண்டில் 542 மில்லியனாக இருந்தது. இது 2025இல் 1.2 பில்லியனாக அதாவது இரு மடங்காக உயரப்போகிறது. சுமார் 4 முதல் 6 சதவீதம் முதியோர்களுக்கு உரிய மரியாதை கிடைப்பதில்லை. இதனால் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். முதியவர்களை மரியாதையுடன் நடத்த ஐ.நா. இத்தினத்தை அறிவித்துள்ளது.
- **உலகம் பாலைவனமாதல் மற்றும் வறட்சி ஒழிப்பு தினம் (World Day to Combat Desertification and Draught)** மனிதனாலும், சீதோஷ்ண நிலை மாற்றத்தாலும் வறட்சி

ஏற்பட்டு, நிலங்கள் பாலைவனமாக மாறுகிறது. மேலும் பூமியின் நிலப்பரப்பு படிப்படியாக பாதித்துக்கொண்டே செல்கிறது. இதனால் மக்கள் வறுமைக்குத் தள்ளப்படுகின்றனர். சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுப்பதன்மூலம் பாலைவனமாதல் மற்றும் வறட்சி ஏற்படுவதைத் தடுக்க முடியும். இதனை உணர்ந்த ஐ.நா. சபை 1994ஆம் ஆண்டில் இத்தினத்தை அறிவித்தது.

- **உலக அகதிகள் தினம்** (World Refugee Day) மதக்கலவரம், இனக்கலவரம், உள்நாட்டுப் போர், இயற்கைப் பேரழிவுகள் போன்ற காரணங்களால் தங்கள் நாட்டில் வாழ்வதற்கு வழி இல்லாமல் வெளியேறுபவர்கள்தான் அகதிகள். அகதிகளும் மனிதர்கள்தான். அவர்களுக்கும் வாழ உரிமை உண்டு. அவர்களின் உரிமையை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் 2000ஆம் ஆண்டில் ஜூன் 20 ஐ உலக அகதிகள் தினமாக ஐ.நா. சபை அறிவித்தது.
- **உலக இசை தினம்** (World Music Day) மொழி தெரியாதவர்களையும் ஒன்று சேர்க்கும் சக்தி இசைக்கு உண்டு. ஆகவே இசையை ஒரு உலக மொழி என்கின்றனர். இசையே நாட்டியத்திற்கு அடிப்படை. மனிதர்கள் அனைவரையும் ஆட்டி வைப்பது இசை. இசையை ரசிக்காதவர்கள் உலகில் யாரும் இருக்க முடியாது. உலகம் முழுவதும் உள்ள இசையமைப்பாளர்கள் 1982ஆம் ஆண்டு ஜூன் 21 அன்று பிரான்சில் கூடினர். அந்த நாளையே உலக இசை நாளாக அறிவித்தனர்.
- **சர்வதேச விதவைகள் தினம்** (International Widow's Day) உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான விதவைப் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகள் மற்றும் இன்னல்கள் குறித்து ஐ.நா. சபை விவாதித்து ஜூன் 23 ஐ சர்வதேச விதவைகள் தினமாக 2010ஆம் ஆண்டில் அறிவித்தது. உலகம் முழுவதும் கணவன்மார்களை இழந்து, ஆதாரவின்றி தவிக்கும் பெண்களின் நிலை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- **உலக தந்தையர் தினம்** (World Father's Day) சோனாரா ஸ்மார்ட் டோட் என்ற பெண் அமெரிக்காவில் வில்லியம் ஜாக்சன் ஸ்மார்ட் என்பவருக்கு ஆறாவது குழந்தையாகப் பிறந்தார். இவர் பிறந்தவுடன் தாய் இறந்துவிட்டார். தனது தந்தையே கஷ்டப்பட்டு குழந்தைகளை வளர்த்தார். தனது தந்தைக்கு மரியாதை செலுத்தும் வகையில் 1910ஆம் ஆண்டில் தந்தையர் தினத்தைக் கொண்டாடினார். இதனை அடிப்படையாகக்கொண்டு அமெரிக்க ஜனாதிபதி 1966ஆம் ஆண்டில்

தந்தையர் தினத்தை அறிவித்தார்.

- **உலக இளம் மருத்துவர்கள் தினம்** (World Young Doctor's Day) மாறிவரும் சமுதாயத்தில் இளம் மருத்துவர்கள் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் அதிகம் உள்ளது. இவர்கள் கிராமப்புறங்களில் சேவை செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே இளம் மருத்துவர்கள் அடிப்படை சட்ட அறிவினைப் பெற்றிருக்க வேண்டியது அவசியம். இதுபோன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்கிற நோக்கில் 2011ஆம் ஆண்டில் இத்தினம் அறிவிக்கப்பட்டது.
- **மனித மரபணுவின் மாதிரி வரைபடம் வெளியான நாள்** (Human Genome Mapping Day) மனித உடலில் உள்ள டி.என்.ஏ. இரசாயன அடிப்படை இணைவுகள் உருவாக்கப்பட்ட விதம் சார்ந்த ஆய்வு 1984இல் தொடங்கப்பட்டது. மரபணுவின் மாதிரி வரைபடம் உருவாக்கப்பட்ட செய்தி 2000ஆம் ஆண்டு ஜூன் 26இல் அமெரிக்காவின் அதிபர் பில் கிளிண்டன் மற்றும் பிரிட்டனின் அதிபர் டோனி பிளேர் இணைந்து வெளியிட்டனர். ஆய்வின்படி மனித இனத்தில் 20,500 விதமான மரபணுக்கள் உள்ளன எனத் தெரியவந்தது.
- **சர்வதேச போதை ஒழிப்பு தினம்** (International Day Against Drug abuse and Illicit Trafficking) போதைப்பொருட்களை அதிகம் பயன்படுத்துவது இளைஞர்கள்தான். இதனால் ஊழல், வன்முறை, குற்றங்கள், பாலியல் நோய்கள், எய்ட்ஸ், உடல் நலக்கோளாறு, மனநல நோயால் பலர் பாதிக்கப்படுகின்றனர். மனிதசமூகத்திற்கு பின்னடைவும், பொருளாதார பாதிப்பும் ஏற்படுகிறது. போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழிப்பு ஆகியவற்றை கருத்தில்கொண்டு இத்தினம் 1988ஆம் ஆண்டுமுதல் கொண்டாடப்படுகிறது.
- **சித்திரவதையால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தினம்** (International Day Support of Victims of Turture) சர்வதேச சட்டத்தின்படி சித்திரவதை என்பது ஒரு சமூகக்குற்றம் என ஐ.நா. சபை கூறுகிறது. சித்திரவதை மற்றும் துன்புறுத்தல் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கான சட்டமும் உள்ளது. சித்திரவதை என்பது வீடுகளில் தொடங்கி, சிறைச்சாலை மற்றும் போர்க் கைதிகள்வரை தொடர்கிறது. 1997ஆம் ஆண்டில் ஐ.நா. சபை இத்தினத்தை அறிவித்தது.